**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 164 of 2024

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : பிரதீப்குமார்

Father's Name : சிவராஜ்சிங்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of September** 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் கோவை மாவட்டம், கண்ணம்பாளையம், மனோஜ் நகரில் குடியிருந்து கொண்டு திருச்சி ரோட்டில் லக்கி மார்பில் என்ற பெயரில் வணிகம் கடை நடத்தி வருகிறேன். எதிரி மாதவ்லால் என்னிடம் மேனேஜராக எங்கள் நிறுவனத்தில் பணி செய்து வந்த நபர் ஆவார். நான் கடந்த 14.01.2024-ம் தேதி எனது சொந்த ஊரான ராஜஸ்தான் சென்றுவிட்டேன். ஆகவே கடையில் வரவு செலவுகளை மேலாளர் மாதவ்லால் என்பவரிடம் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு சென்று விட்டேன். அதன் பின்பு 19.01.2024 ம் தேதி திரும்பவும் வீட்டிற்கு வந்து விட்டேன். காலை 10 மணிக்கு கடைக்கு சென்று மாதவ்லால் என்னிடம் ஐந்து நாட்களில் வியாபாரம் செய்த பணம் ரூபாய் 5 லட்சத்து 67 ஆயிரத்து 200 இருப்பதாக என்னிடம் சொல்லி பணத்தை காண்பித்தார். அதனை நானும் எண்ணிப் பார்த்து ரூபாய் 5 லட்சத்து 67 ஆயிரத்து 200 இருந்தது.

2. பிறகு மாதவ்லாலிடம் பேங்கிற்கு சென்று கம்பெனி கணக்கில் வரவு வைக்குமாறு கொடுத்து அனுப்பினேன். நான் மதியம் சுமார் 2 மணி அளவில் பணம் வங்கியில் செலுத்த சென்ற மாதவ்லால் திரும்ப வராததால் அவருக்கு போன் செய்தேன். அவர் போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. பின்னர் விசாரித்ததில் அவர் அங்கு சென்று விட்டதாக கேள்விப்பட்டேன். எதிரியும் எங்கள் மாநிலத்தைச் சார்ந்தவர் தான். நான் அங்குள்ள அவர்களது உறவினிடமும் விசாரிக்க அவர் ராஜஸ்தான் வரவில்லை என கூறினார்கள். நான் பல இடங்களில் எதிரியை தேடியும் அவர் எங்கு உள்ளார் என்பது தெரியவில்லை. பின்னர் இது சம்பந்தமாக நான் சூலூர் காவல் நிலையத்தில் 02.02. 2024 ஆம் தேதி புகார் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. ஆகவே என்னுடைய நண்பர் வரதராஜன் என்பவர் மூலமாக புகாரை எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன். பின்னர் எதிரியை போலீசார் பிடித்ததாக கேள்விப்பட்டேன். நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய பணம் ரூபாய் மூன்று லட்சம் மட்டும் திரும்ப பெற்றுச் சென்றேன். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள பணத்தை பெற்றுகொண்டேன். புகைப்படம் CD யுடன் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.29 20:58:03 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**